
குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின்
எங்கும் நிறைகின்ற பொருள்
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே


1. அவனன்றி ஓர் அணுவும் அசையாது
2. இறைவனின் கருணை விளையாட்டு
3. ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
4. மனமாயையை என்னால் அடக்கவசமோ?
5. முக்திநிலை ஈதென்று உணர்த்தியே
6. நின்னோடு இருக்கும் நாள் எந்தநாள்
7. பரிபாக காலம் பிறக்க இலையோ?
8. மாதவர்க்கு ஏவல்செய்து சித்திபெறலாமா?
9. எப்படிப் பிழைப்பது உரையாய்?
10. பேரின்ப முத்திபெறுவது போராட்டமா?
11. ஆனந்த நிறைவே


## 1.அவனன்றி ஓர் அணுவும் அசையாது

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான்; அவன் வாரி வழங்கும் வள்ளல்; கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் கொடுத்தான். அவனிடம் பரிசு பெற்ற பலர் அவனைப் பாராட்டினர்.

ஆனால் அறிஞர் பெருமக்களோ எல்லாம் இறைவன் செயல் என்று தனி மனிதன் துதியில் இறங்கவில்லை.

பரிசு வாங்கியவர்களில் ஒருவர் அரசனை இந்திரனே, சந்திரனே, பாரியே, ஓரியே, காரியே என்று புகழ்ந்தார்.

வேறு ஒரு அறிஞர் ‘அவனின்றி ஓர் அணுவும் அசையாது — எல்லாம் ஈசன் செயல் — ஈஸாவாஸ்யம் இதம் சர்வம் என்று சொன்னார்.

‘ஈஸாவாஸ்யம் இதம் சர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்
தேன த்யக்தேன புஞ்ஜீதா மாக்ருதஹ கஸ்யஸ்யத்வித்தனம்’
(ஈஸாவாஸ்ய உபநிஷத்தின் முதல் மந்திரம்)

இதன் பொருள் என்ன தெரியுமா?

இந்த உலகம் முழுவதும் இறைவனால் வியாபிக்கப்பட்டுள்ளது; எல்லாம் அவன் கட்டுப்பாட்டில் உள்ளது; அவரவர்ffளுக்கு உரியதை அனுபவியுங்கள்; பிறருடைய செல்வத்துக்கு ஆசைப் படாதீர்கள் எத்தனை முறை பரிசு கொடுத்தாலும் இதே கதைதான்.

அரசனோ தன்னைப் புகழ்வதையே விரும்பினான். இறைவன் பற்றிய புகழ்ச்சியை அவன் விரும்பவில்லை. ஆனால் அறிஞர் பெருமக்களிடம் என்னைப் புகழ்ந்து பேசுங்கள், பாடுங்கள் என்று சொல்லத் துணிவும் இல்லை.

ஒரு முறை இதை அறிஞருக்கு குறிப்பால் உணர்த்துவோம் என்று கருதி இருவரையும் அழைத்தான்; தன்னை எக்காலமும் முக்காலமும் புகழும் ஒரு ஆளுக்கு ஒரு பூசணிக்காய்க்குள் ரத்தினக் கற்களை நிரப்பிக் கொடுத்தான்

அதை வாங்கியவர் வெறும் பூசணிக்காய் என்றே நி ன  த்தார். குறைந்த மதிப்புள்ள இரண்டு நாணயங்களை அறிஞரிடம் கொடுத்தார். இருவரும் புதிய பரிசுப் பொருட்களுடன் அரண்மனையிலிருந்து வீடு சென்றனர்.

பூசணிக்காய் வாங்கியவருக்குக் கொஞ்சமும் திருப்தி இல்லை. அவர் வீட்டின் வழியாகச் சென்ற அறிஞரை அழைத்து நீங்களே இந்தப் பூசணிக்காயையும் எடுத்துக்கொள்ளுங்கள் என்றான்;

அவரும் அதை மனமுவந்து ஏற்று, என்னிடமுள்ள இரண்டு காசுகளை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அறிஞர் பெருமகன் வீட்டிற்குச் சென்று மனைவியிடம் பூசணிக்காயைக் கொடுத்து சமைக்கச் சொன்னார். அவள் அதை வெட்டிய அடுத்த நிமிடம் ரத்தினக் கற்கள் கீழே விழுந்தன.

உடனே அந்த அறிஞர் நமக்குத் தேவையானதற்கு மேல் எதுகிடைத்தாலும் அதற்கு ஆசைப்படக்கூடாது;

‘ஈஸாவஸ்யம் இதம் சர்வம் என்ற உபநிஷத மந்திரத்தைச் சொல்லி, அரசனிடமே அந்த ரத்தினக் கற்களைக் கொடுத்து பூசணிக்காய் விஷயத்தைச் சொன்னார். அரசனுக்கு பெரும் வியப்பு!!

நான் இந்த ஆளுக்குக் கொடுக்கக் கூடாது என்பதற்காக காய்க்குள் மறைத்து ரத்தினக் கற்களை வேறு ஒருவருக்குக் கொடுத்தேன். நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறதே என்று வியந்தான்.


பின்னர் அவனின்றி ஒரு அணுவும் அசையாது என்பது உண்மையே என்பதை ஏற்று தனது தவறையும் உணர்ந்தான்.

அவனுடைய ஆணவம் அகன்றது; யார் யாருக்கு என்ன என்னவென்பதை இறைவன் ஏற்கனவே நிச்சயித்து விட்டான்; நான் ஒரு கருவி மட்டுமே என்ற ஞானோதயம் ஏற்பட்டது. இறைவனின் கணக்குப்படியே எல்லாம் நடக்கும் என்பதை உணர்ந்தான்

அவனின்றி ஓர் அணுவும் அசையாது எனத் திருமூலர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடினார். இதற்குக் காரணம் அவர் அணுவின் அசைவை சிவனாகப் பார்த்தார்.

நாம் காலங் காலமாக வணங்கி வரும் நடராஜர் சிலையில் அணுவியல் துகள்கள் நகரும் அமைப்பின் சூட்சமம் அடங்கியுள்ளது.

ஓர் அணு என்பது புரோட்டொன், நியூட்ரோன் மற்றும் எலெக்ட்ரோன்களால் ஆனவை. புரோட்டோனும் நியூட் ரோனும் ஒன்றோடு ஒன்றாய் பிணைந்திருப்பதை நியூக்லியஸ் என்றழைப்பர்.




இந்த நியூக்லியஸை சுற்றி வரும் எலெக்ட்ரோன் சுழன்று ஒரு சுற்றுப்பாதையை உருவாக்குகிறது.

இதுவே அணுநகர்வு. இந்த அணு நகர்வுதான் நடராஜர் சிலையின் வடிவம்.

இந்த அணுக்களை இயக்கும் ஒரு உப அணு கண்டிப்பாக இருக்க வேண்டும் என விஞ்ஞானிகள் கருதினர்.

இதற்குக் காரணம் பெரு வெடிப்பு. அதாவது 'Bi g–Bang' தத்துவத்தின் படி பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்த அண்டம் என்பது ஒரு தீப்பிழம்பாக இருந்தது.

இந்த தீப்பிழம்பானது விரியத் தொடங்கவே வெப்பம் தணிந்த வாயுக்கள் ஆங்காங்கே நட்சத்திரக் கூட்டமாகவும் கோள்களாகவும் உருவாகின.

இந்த அண்டம் இன்னும் விரிந்துக் கொண்டேதான் போகின்றது.

இந்த அணுக்களையும் அணுக் கூட்டங்களையும் ஒன்றோடு ஒன்றாக கட்டிப் போடும் புவியீர்ப்பு சக்தியைக் கழித்தால் நிறை ஒன்று கிடைக்கும்.

அதுதான் ஆங்கிலத்தில் ' Mass'.

இந்த நிறை என்பது விஞ்ஞானிகளுக்கு பல காலமாக புரியாத புதிர்!

இந்திய விஞ்ஞானி சத்யேந்திர நாத் போஸ் இந்த ஆராய்சி தொடர்பாக 1924ல் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனுக்கு ஆராய்ச்சி கட்டுரை அனுப்பினார்.

இவர்களின் ஆராய்சியை அடிப்படையாக கொண்டே இந்த கடவுள் அணுவைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி தொடங்கப்பட்டது. இதற்கு ஆங்கிலத்தில் ' HIGGS BOSON' .

இதைத்தான் திருமூலர் முன்னமே 'ஈசன்' என்றார். இந்த ஈசனின் உருவம்தான் கடவுள் அணுவின் உருவம்!

"கரந்துங் கரந்திலன் கண்ணுக்குங் தோன்றான்
பரந்த சடையான் பசும்பொன் நிறத்தான்
அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே"

கருத்த பரந்த சடையின் நடுவே பொன்னிறத்தில் ஒரு உருவமில்லா ஒளியைக் கற்பனை செய்துப் பாருங்கள் அதுவே ' HIGGS BOSON அதுவே உருவமுள்ள நடராஜர் சிலை, ஒளியின் வடிவாய் கடவுள் அணு ' HIGGS BOSON.

இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றம் பரிமாணம் என பிரபஞ்ச ரகசியத்தைக் கூறும் வல்லமை உள்ளதாலே இதை கடவுள் அணு என்கிறார்கள்.

இந்தக் கடவுள் அணுவை முழுமையாகக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் நெருங்கிவிட்டனர்.

இதன் முயற்சிகள் அனைத்தும் அணுசக்தி தொடர்பான ஐரோப்பிய ஆராய்சி நிலையமான செர்னில் (CERN) நடந்தது.

இந்த அணு நகர்வுக்கும் நடராஜர் சிலைக்கும் உள்ள தொடர்பினை அறியவே இந்த ஆய்வுக் கூடத்தின் வாசலில் இந்தியா வழங்கிய 6 அடி உயர சிதம்பர நடராஜர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த கடவுள் அணுவின் எவ்வளவு பெரியது தெரியுமா?

அணு என்பதே நம் கண்களுக்கு புலப்படாத ஒன்று. இந்தக் கடவுள் அணுவை வர்ணிக்கிறார் திருமூலர் இவ்வாறு,

"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறுநா றாரயிரத்து ஒன்றே"

பசுவின் முடியில் ஒன்றை எடுத்து, அதை நூறாக கூறிட்டு, பின் அதில் ஒன்றை ஆயிரமாக கூறிட்டு, அதை நான்காயிரமாக பிரித்தால் அதுவே இந்த கடவுள் அணுவின் வடிவம்!

இந்த பிரபஞ்ச ரகசியத்தைக் கூறும் இந்த கடவுள் அணுவிற்கு இந்து சமய தத்துவ அடிப்படையில் நடராஜர் சிலையில் காணப்படும் உவமை என்ன?

இந்த அணு நுகர்வை பற்றியும் நடராஜர் சிலையைப் பற்றியும் எழுதிய முதன் முதலாக ப்ரிட்ஜாப் காப்ரா 'The Tao of Physics' எனும் நூலில் எழுதினார்.

'ஒவ்வொரு அணுநகர்வும் ஒரு ஆற்றல்மிக்க நடனத்தை வழங்குவது மட்டுமில்லாமல் அதுவே ஒரு ஆற்றல் மிக்க நடன உருவாக உள்ளது.

இது ஆக்கல் மற்றும் அழித்தல் காரியத்தை திரும்பத்
திரும்பத் செய்து கொண்டுதான் இருக்கிறது.

இதுவே இந்து சமய அடிப்படையில் இந்து சமயம் வணங்கும் சிவனின் நடனம். பிரபஞ்சத்தை உவாக்குபவனும் அழிப்பவனும் அவனே! இது முடிவில்லாத் தொடர்' என்கிறார்.

சிவனின் வலது கையில் இருக்கும் உடுக்கை ஓம் என்ற மந்திரத்தைத் ஒலிக்கும். இதுவே பிரபஞ்ச ஒலி எனக் கூறப்படுகிறது.

இடது கையில் இருக்கும் தீ அழிவு மற்றும் ஒரு வடிவத்தை கலைத்து புதிய உலகம் உலகம் உருவெடுக்க வழி வகுக்கும்.

கீழிறுக்கும் வலது கை அபய முத்திரை. பயம், தீயசக்திகளிலுருந்து விடுதலை கொடுக்கிறது. இடது காலை சுட்டிக் காட்டும் வலது கை இரட்சிப்பையும் ஞானத்தையும் குறிக்கிறது.

சிவனின் காலில் இருக்கும் அபஸ்மாரா என்பவன் அழிக்க முடியாதவன் ஆனால் சமாளிக்க முடிந்தவன்.

இது அறியாமையை சிவன் ஆட்கொள்வதையும் சுற்றியுள்ள தீப்பிழம்பு பிரபஞ்சத்தையும் குறிக்கிறது. சிவனின் இடுப்பில் இருக்கும் பாம்பு அனைவரிடத்திலும் தெய்வீக சக்தி அதாவது குண்டலினி சக்தியைக் குறிக்கிறது.

பரந்து கிடக்கும் சடையானின் தலையில் இருக்கும் கங்கை நதி ஆகாயத்திலிருந்து பூமிக்கு வரவே உலகம் அழியும் என்றும் குறிக்கப்படுகிறது.

574 அடி ஆழத்தில் 27 கி.மி. நீளம் உள்ள சுரங்கப்பாதையில் Large Hadron Collider ஒன்றில் பெரு வெடிப்பு போன்ற ஒன்றை உருவாக்கி அதன் மூலம் கண்டுபிடிக்க முயற்சிக்கும் இந்த அணு ரகசியத்தை,

“அணுவின் அணுவினை ஆதிப்பிரானை
அணுவின் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவின் அணுவினை அணுகவல்லார்க்கு
அணுவின் அணுவினை அணுகலுமாமே” (திருமந்திரம்)

ஆனால் இந்து சமயத்திற்கும் அறிவியல் கோட்பாடுகளுக்கும் இடையே பிணைக்கப்பட்டுள்ள ரகசியங்கள் வெறும் ரகசியமாய் இல்லாமல்

வெளிச்சத்திற்கு வந்தால் மட்டுமே பல அர்த்தங்கள் புரியும், அறியாமை நீங்கும்!

அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனும்பெரிய
ஆப்தர்மொழி ஒன்றுகண்டால்
அறிவு ஆவதுசில அறியாமை ஏது. இவை
அறிந்தார்கள் அறியார்கள் ஆர்?

மௌனமொடு இருந்தது ஆர் என்போல் உடம்பு எலாம்
வாயாய்ப் பிதற்றுமவர் ஆர்?
மனது எனவும் ஒருமாயை எங்கே இருந்துவரும்?
வன்மையொடு இரக்கம் எங்கே?

புவனம் படைப்பது என்? கர்த்தவியம் எவ்விடம்?
பூதபே தங்கள் எவ்விடம்?
பொய்மெய், ஹிதம் அஹிதமே, வரும் நன்மை தீமையொடு
பொறை பொறாமையும் எவ்விடம்?

எவர்சிறியர். எவர்பெரியர். எவர் உறவர் எவர்பகைஞர்.
யாதும் உனை அன்றி உண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே. (தா.பா.89)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- "(அவன் முழுமுதற் கடவுள்) அன்றி ஓர் அணுவும் அசையாது!" என்னும் மெய்ஞ்ஞானியரது மகாவாக்கியம் ஒன்றை, ஆராய்ந்து கண்டால்,
- அறிவு என்பது எது?

- அறியாமை என்பது எது?
- அறிந்தவர்கள் யார்?
- அறியாதவர்கள் யார்?
- மௌனமாய் இருந்தவர் யார்?
- என்னைப் போல உடம்பு முழுவதும் வாயாய்ப் பிதற்றுபவர் யார்?
- மனம் என்ற ஒரு மாயை எங்கிருந்த வரும்?
- வன்மை எங்கே?
- இரக்கம் எங்கே?
- உலகைப் படைப்பது என்பது எது?
- ஒத்து இன்பம் செய்வது எது?
- ஒவ்வாது துன்பம் தருவது எது?
- நன்மை எது? தீமை எது?
- பொறுத்துக் கொள்ளும் தன்மை எவ்விடத்தது?
- பொறுத்துக் கொள்ளாத தன்மை எவ்விடத்து?
- சிறியவர் யார்?
- அனைத்தும் உன்னை அன்றி வேறு உளவோ? (இல்லை என்பது தெியவரும்)

## இறைநிலை இல்லாத அசைவே இல்லை - வேதாத்திரியம்

இறைநிலையை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்
காட்டாற்று வெள்ளத்தை ஓர் அணைக்கட்டாகக் கட்டி கால்வாயில் விட்டு பாசனவசதி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

அந்த மாதிரி மனிதனின் ஆற்றலை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டுமானால் "இறைநிலையை" பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

இறைநிலை இல்லாத மனித வளம் என்பதோ மனித செயல் என்பதோ இல்லை. இறையாற்றல் இல்லாத இடமே இல்லை.




இறைநிலை இல்லாத அசைவே இல்லை. அவனன்றி அணுவும் அசையாது என்பது தான் உண்மை.

அப்படியானால் உடலுக்குள்ளாகவும் அந்த ஆற்றல் இருக்கத்தானே வேண்டும்.


உடலுக்குள்ளாக இறைநிலையை கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் வேறு எங்கே போய் கண்டுபிடிப்பது?

என்ற சிந்தனையைச் செலுத்த முடியுமேயானால் வெகு சீக்கிரத்தில் இறைநிலையை பற்றி உணர்ந்து கொள்ள முடியும்.




அதற்கான வழி - "இறைநிலையை" உணர்ந்த குருவின் மூலம் கிடைக்கும் தத்துவ விளக்கங்களும், முறையான 'அகத்தவப் பயிற்சியும்', சிந்தனையுடன் கூடிய 'அகத்தாய்வு பயிற்சியும்' கற்று பயன் கொள்ள வேண்டும்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.



MANNARGUDI BANUKUMAR
FOUNDATION TRUST
YOUTUBE CHANNEL
VETHTHATHIRIAM BANUKUMAR
KUMAR VADIVELU
THAYUMANAVAR BANUKUMAR
Ebooks WEBSITE ADDRESS
Http://www.banukumar.in
MANNARGUDI BANUKUMAR
FREE PDF DIRECTORIES
With links to over 2,000 video and audio recordings...


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின் பரிபூரணானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின் ஆனந்தமானபரம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமயானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

## 2.இறைவனின் கருணை விளையாட்டு

ஆசிரமம் ஒன்றிற்கு வந்த பக்தன் ஒருவன், அங்கிருந்த சீடர்களிடம் கடவுளை காண பல மைல் தூரம் பயணம் செய்து வந்துள்ள எனக்கு நீங்கள் உதவ முடியுமா? என்று கேட்டான்.

அவனை சீடன் ஒருவன் கைப்பிடித்து அழைத்து சென்று ஆசிரமத்தை சேர்ந்த கோயில், சிற்பங்கள், தூய்மையான மடைப்பள்ளி, அழகானதோட்டம் என் அனைத்தையும் காட்டி விளக்கம் தந்தான்.

இது போன்று நிறைய பார்த்து விட்டேன். இங்கே நான் கடவுள் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. நான் கிளம்புகிறேன் என்றான் பக்தன்.

அச்சமயம் அங்கு வந்த குருநாதர், சீடனிடம் விருப்பத்தோடு வேண்டி அழைக்கிற எந்த இடத்திலும் கடவுள் ஓட்டோடி வருவார்.

ஆனால் நீயோ இந்த ஆசிரமத்தில் பக்தன் நுழையாதபடி தூய்மை, பெருமை என சட்டத் திட்டங்கள் போட்டு அவனது வருகையை தடை செய்து விட்டாய்.

அடுத்த முறை கடவுளை தேடி யாராவது வந்தால் அவர்களிடம் போலியாய் நீ எழுப்பியுள்ள வேலிகளை காட்டாதே. அன்பு, எளிமை இவற்றோடு இறைவனை புரிய வைக்க முயற்சி செய் என்றார்.

இறையருள் பெற....

ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடு உடைய இளைஞன் ஒருவன், ஒரு சமயம் குருநாதர் ஒருவரை சந்தித்து, சுவாமி நான் பிறப்பற்ற நிலையை அடைவதற்கு நல்வழி காட்டுங்கள் என வேண்டினான்.

நான் உனக்கு ஒரு மந்திரத்தை சொல்லி தருகிறேன். நீ அமைதியாக தனிமையில் அமர்ந்து அதை தியானம் செய்து வா என மந்திரத்தை குரு உபதேசிக்க, அவன் வீடு திரும்பினான்.

வீட்டில் குழந்தைகள் விளையாடி கொண்டிருந்தனர். அக்கம் பக்கத்து வீடுகளில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

எங்கும் இரைச்சலாக இருந்ததால் வீட்டில் தியானம் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்தவன் ஊருக்கு வெளியே ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அங்கே போய் உட்கார்ந்தான்.

அங்கும் அவனால் தியானத்தில் அமரமுடியவில்லை. இலைச் சருகுகள் காற்றில் அசைவதும், பறவைகள் கூச்சலிடுவதும் அவருக்கு எரிச்சலை உண்டாக்கின.

உலகில் எங்குமே அமைதி இல்லை என்ற முடிவுக்கு வந்தவன் மீண்டும் குருநாதரிடமே வந்தான்.

சுவாமி தனிமை வீட்டிலும் இல்லை. காட்டிலும் இல்லை என வருந்தினான்.

புன்னகை பூத்த குரு, எந்த இடைஞ்சல் வந்தாலும் அதையெல்லாம் கடந்து ஒரு செயலில் ஆழ்கிறவனே, இறைவனின் அருளை பெற முடியும். இறையருளை பெறுபவனே பிறப்பற்ற நிலையை அடைய முடியும் என்றார்.

அன்னே அனேஎனும் சிலசமயம் நின்னையே
ஐயாஐயா என்னவே
அலறிடும் சிலசமயம் அல்லாது பேய்போல
அலறியே ஒன்றும் இலவாய்ப்

பின்ஏதும் அறியாமல் ஒன்றைவிட்டு ஒன்றைப்

பிதற்றிடும் சிலசமயம். மேல்
பேசரிய ஒளி என்றும் வெளி என்றும் நாதாதி
பிறவுமே நி லயம் என்றும்

தன்நேர் இலாததோர் அணு என்றும் மூவிதத்
தன்மையாம் காலம் என்றும்
சாற்றிடும் சிலசமயம். இவை ஆகி வேறதாய்ச்
சதாஞான ஆனந்தமாய்,

என்னே எனேகருணை விளையாட்டு இருந்தவாறு!
எம்மனோர் புகலஎளிதோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்குநிறை கின்ற பொருளே. (தா.பா.90)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- உன்னை சில சமயங்கள் தாயே! என்று கூறும்!
- சில சமயங்கள் தந்தையே! என்று கதறி அழைக்கும்.
- இவை அல்லாது, பேய்போல் கதறி, ஒன்றும் கூற முடியாதும், ஒன்றும் அறிய முடியாதும், சில சமயங்கள் ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றிப் பிதற்றும்.
- சில சமயங்கள் சொல்ல அரிய ஒளி என்றும்,
- வேறு சில சமயங்கள் வெளி என்றும்,
- நாதம் முதலிய தத்துவங்களே என்றும் கூறும்.
- தனக்கு நிரில்லாத அணுவே தெய்வம் என்று சில சமயங்களும்,
- மூன்று காலங்களே கடவுள் என்று சில சமயங்களும் கூறிடும்.
- ஆனால் இவற்றின் வேறாக, எப்பொழுதும் பேரறிவும் பேரின்பமும் உடையதாய் இருந்த உமது அருள் விளையாட்டு

இருந்தவாறு என்னே! அதனை எம்போன்றோர் விளக்கிக் கூற எளிமையாமோ?

## வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் – வேதாத்திரயம்

இறையுணர்வு பெற்றவர்கள் இதுவரையில் தெளிவாக மொழி வழியிலும், பயிற்சி வழியிலும் கொடுத்துள்ள உண்மை விளக்கம் என்னவென்றால்,□சுத்தவெளியாகிய இறைநிலையே முடிவான அருட்பேராற்றலான தெய்வமாகும்□ என்பதாகும்.

சுத்தவெளியானது (1) வற்றாயிருப்பு, (2)பேராற்றல், (3)பேரறிவு, (4)காலம் என்கின்ற நான்கு வளங்களை உடையதாக இருக்கிறது.

### வற்றாயிருப்பு

சுத்தவெளியாகிய பெருவெளியில் இருந்து அணு முதலாக அண்டங்கள் மற்றும் உயிரினங்கள் எவ்வளவு தோன்றினாலும் சுத்தவெளியோ, அதனுடைய ஆற்றலோ எந்த அளவிலும் குறைவுபடாது. இந்த உண்மையை விளக்குகின்ற வார்த்தைதான் வற்றாயிருப்பு ஆகும்

### பேராற்றல்

பலகோடி சூரியக் குடும்பங்களை உடைய இந்த பேரியக்க மண்டலத்தில் உலவுகின்ற அனைத்தையும் இதே சுத்தவெளிதான் தாங்கிக் கொண்டு இருக்கிறது. இதனால் சுத்தவெளியை பேராற்றல் என்று கூறுகிறோம்.

### பேரறிவு

எந்தப் பொருளிலும், எந்த இயக்கத்திலும் இதே சுத்தவெளிதான் ஊடுருவி நிறைந்து ஒழுங்காற்றலாக, செயல் புரிந்து வருகிறது.

இந்த ஒழுங்காற்றல்தான் அறிவு என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு தோற்றத்திலும்,உருவ அமைப்பு,குணங்கள் மற்றும் காலத்தால் காலம் என்ற அதிர்வால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அனைத்தும் நிகழ்கின்றன.

இதனால் சுத்தவெளியானது பேரறிவு என்று விளக்கப்படுகிறது.

### காலம்

சுத்தவெளியானது தன்னிறுக்க அழுத்தமாக உள்ளதால், அது தன்னைத்தானே விட்டுவிட்டு அழுத்தும்போது, அதுவே நுண்ணதிர்வாகச் செயல்புரிகிறது.

இந்த நுண்ணதிர்வு என்ற காலத்தின் நுண்ணிய அலகானது கண்சிமிட்டும் நேரம்போல மிகக் குறைவானதாகும்.

இந்த அதிர்வு இறைநிலையில் அடங்கி இருப்பதனால் எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம், வளர்ச்சி, முடிவு என்ற செயல்கள் உண்டாகின்றன. இதனால் இறையாற்றலை காலம் என்று சொல்கிறோம்.

ஆகவே இறையாற்றல் என்ற பெருவெளி வற்றாயிருப்பாக இருக்கிறது. பேராற்றலாக இருக்கிறது. பேரறிவாக இருக்கிறது. அதுவே காலமாகவும் இருக்கிறது.

## இறைநிலை

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும்
    வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
    வான்கோள்கள், உலகம், உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே பரிணாமம்
    வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்

வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம் உண்மை,உண்மை”
(ஞா.பா.1666)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 3. ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்

ஒரு பெரிய மடாலயத்தில் சீடர்கள் வட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் திடீரென வாக்குவாதம் எழுந்தது.

“திருடனாக இருப்பவனுக்கு எப்போதும் கெட்டது தான் நடக்கும்” என்று ஒரு பக்கமும், இன்னொரு பக்கம் “இல்லை, நல்லதும் நடக்கும்” என்றும் வாதாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களது குரலைக் கேட்டு வந்த ஜென் குரு, என்ன பிரச்சினை என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் அந்த வாக்குவாதத்தை கூறினர். ஆகவே அதில் உள்ள உண்மையை புரிய வைப்பதற்கு, அவர்களுக்கு ஒரு கதையைக் கூற ஆரம்பித்தார்.



“ஒரு போர் வீரன், தன்னுடைய உயர் அதிகாரியின் மனைவியை காதலித்தான்.

அது உயர் அதிகாரிக்கு தெரியவர... மரண தண்டனைக்கு பயந்தவனாய் அந்த அதிகாரியின் உடைமைகளை எடுத்துக்கொண்டு, அவருடைய மனைவியுடன் ஓடிவிட்டான்.

பின்னர், இருவரும் சந்தோஷமாக வாழ்வதற்கு திருடர்களாக மாறினர். சிறிது காலம் நிலைத்த சந்தோஷம் விரைவிலேயே முடிவுக்கு வந்தது.

ஒரு நாள் போர் வீரனை உதறிவிட்டு அந்த பெண் ஓடிவிட்டாள். மனமுடைந்த வீரன், அருகில் இருந்த ஊரில் பிச்சையெடுக்க ஆரம்பித்தான்.

தனது வாழ்நாளில் செய்த பாவங்களுக்கு பரிகாரமாக, சில நல்ல காரியங்களை செய்ய முடிவெடுத்தான்.

அப்போது ஒரு குன்றின் மீது ஓர் ஆபத்தான சாலை இருப்பதும், அதனால் பல பேர் மரணமடைவதும் இவனுக்கு தெரியவந்தது.

அதனால் அங்கு அந்த மலை வழியாக ஒரு சுரங்கம் வெட்ட எண்ணினான். பகல் நேரங்களில் உணவுக்கு பிச்சை எடுப்பதும், இரவு வேளையில் சுரங்கம் தோண்டுவதை வேலையாகவும் செய்து வந்தான்.

முப்பது ஆண்டுகள் உருண்டு ஓடியது. சுரங்கப்பாதையும் அகலமானது. வேலை முடியும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டான்.

அதாவது உயர் அதிகாரியின் மனைவியை கவர்ந்து வந்தான் அல்லவா? அவனது மகனின் கண்களில் அகப்பட்டான். தந்தைக்கு துரோகம் செய்தவனை பழிதீர்க்கும் கோபம் அவனது கண்களில் கொளுந்துவிட்டு எரிந்தது. உடனே சரணடைந்தான், போர் வீரன்.

உன்னுடைய கோபம் நியாயமானதுதான். ஆனால் இந்த சுரங்கத்தை வெட்டி முடித்ததும் என்னை கொன்றுவிடு என்று உருக்கமாக கோரிக்கை வைத்தான்.

அதன்படி... எஞ்சியிருக்கும் சுரங்க வேலைகளை வேகமாக செய்ய

ஆரம்பித்தான். எத்தனை காலம் தான் பழிவாங்கும் கோபம் இருக்கும்.

அதனால் கோபம் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. போர் வீரனுடன் சேர்ந்து அவனும் சுரங்க வேலைகளை துரிதப்படுத்தினான்.

கடைசியாக சுரங்கப்பாதை முடிந்தது. மக்களும் பாதுகாப்பாக அந்த சுரங்கத்தில் பயணித்தனர்.

போர் வீரன் கத்தியுடன் சரணடைந்தான். என்னை கொன்று விடும்படி கேட்டுக் கொண்டான்.

அப்போது அதிகாரியின் மகன் கோபத்தினால் சிவந்த கண்கள், கண்ணீரால் சிவக்க ஆரம்பித்தது.

“என் அன்னையை ஏமாற்றிய போர் வீரனுக்கும், மற்ற உயிர்களை காப்பாற்ற நினைக்கும் உனக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கிறது. இடைப்பட்ட நாட்களில் நிறையவே மாறிவிட்டாய். இப்போது நான் உன்னை கொன்றால் பழியும் பாவமும் என் தோள்களில் விழுந்துவிடும். அதை என்னால் சுமக்க முடியாது. ஆகவே மற்றவர்களுக்கு நல்ல காரியங்களை செய்து உன்னுடைய பாவங்களை போக்கிக்கொள்” என்று கூறிவிட்டு கிளம்பினான்.

இறுதியில் ஜென் குரு சீடர்களிடம் “திருடனாக இருந்து, திருந்தியப் பின் நல்லதே நினைத்தால், அவனுக்கு நல்லதே நடக்கும்” என்பதை இந்த கதை தெளிவாக விளக்குகிறது அல்லவா..? என்றார்.

வேதமுடன் ஆகம புராண இதி காசமுதல்
வேறும் உள கலைகள் எல்லாம்
மிக்காக அத்வைத துவிதை மார்க்கத்தையே
விரிவா எடுத்துரைக்கும்

ஓதரிய துவைதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணு ஞானம் ஆகும்.
ஊகம்அனு பவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வும்ஈது.
உாயவா திகள்சம்மதம்

ஆதலின் எனக்கு இனிச் சரியை ஆதிகள் போதும்.
யாது ஒன்று பாவிக்கநான்
அது ஆதலால் உன்னை நான் என்று பாவிக்கின்
அத்துவைத மார்க்கம் உறலாம்.

ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையுமுண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்றபொருளே. (தா.பா.91)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலாக உள்ள கலைநூல்கள் அனைத்தும் மிகுதியும்
- உயிரும் இறையும் இரண்டன்று என்றும், இரண்டு என்றும், ஆக இந்த இரண்டு நெறிகைளையே எடுத்துரைக்கும்,
- சொல்லுதற்கு அருமை உடைய இரண்டு என்று சொல்லும் நெறிதான், இரண்டற்றது என்ற ஞானத்தை உயிர்களுக்கு உண்டு பண்ணும்,
- அனுமான அளவை, காட்சி அளவை, உரை அளவை ஆகிய மூன்று அளவைகளாலும் இந்த இரண்டு கொள்கைகளும் உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளப்படும்.
- ஆகையால் எனக்கு இனி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளே போதுமானது.

- எந்த ஒன்றை தொடர்ந்து நினைவு செய்கிறோமா, அதுவாகவே ஆவோம் என்பது நியதி.
- அதன்படி நான், உன்னை நானாகவே நினைத்தால், "இரண்டற்றது" என்னும் நெறியை அடையலாம்.
- எதுவாக உன்னை நான் பாவித்தாலும் அதுவாக வந்து, அருள் செய்யும் எமது தந்தை நீ! ஆகையால் எனக்கு வரும் குறையும் உண்டோ?

## இயல்பூக்க நியதி – வேதாத்திரியம்

எப்பொருளை எச்செயலை எக்குணத்தை
எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைத்தால்
அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்
அறிவினிலும் உடலினிலும் மாற்றங்காணும்;
இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்
எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்
தப்பாது குருயுர்வு மதிப்போர் தம்மைத்
தரத்தில் உயர்த்திப் பிறவிப்பயனை நல்கும். (ஞாக.பா.10)

எந்த ஒரு பொருள், செயல், குணத்தை, உயிரை ஒருவர் மறுபடி, மறுபடி எண்ண, அந்தப் பொருளின் தன்மைகள், அவரில் பிரதிபலிக்கும்.

அவ்வாறே, சீடர் ஒருவர் மீண்டும் மீண்டும் குருவின் பாதையை, குரு வாழச் சொன்ன, குரு வழிகாட்டிய பாதையை மறுபடி, மறுபடி நினைவு கூர்ந்து, குருவின் பாதச்சுவடுகளை பின்பற்றுகிறாரோ, அவர் குரு அடைந்த உச்சகட்ட பிறவிப் பெருங்கடலை கடப்பதனை,பிறவிப் பெரும்பயனை அடைவார்.

அவரும் குருவைப் போல் முழுமைப் பேறு அடைந்து, மற்ற சீடர்களுக்கு குருவாக, வழிகாட்டியாகத் திகழ்வார்.

குரு மட்டுமல்ல, ஏதேனும் ஒரு பெரிய அறிவியல் அறிஞர், பெரிய ஒரு எழுத்தாளர், பெரிய ஒரு இசை மேதை என்று ஒருவர் தனது ஆதர்ஷ புருஷரைத் தொடர்ந்து எண்ண எண்ண, அந்த ஆதர்ஷ புருஷரின் குணாதிசயங்கள் அவருக்கு பரிமளிக்க தொடங்கும்.

உதாரணமாக ஒருவர் தினந்தோறும் விவோகானந்தரை எண்ணத் தொடங்கினால், விவேகானந்தரைப் போன்று சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணங்கள் அவர் மனதில் உதிக்கத் தொடங்கிவிடும்.

விவேகானந்தரைப் போன்ற அறிவாட்சித்திறன்(), நுண்மாண் நுழைபுலன்() போன்ற குணாதிசயங்கள் அவருக்கு ஏற்படத் தொடங்கும்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 4. மனமாயையை என்னால் அடக்கவசமோ?

புத்தர் தனது சீடர்களுடன் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் சென்றார். வழியில் அவர்கள் ஒரு ஏரியைக் கடக்க நேரிட்டது.

ஏரியைக் கடந்து சென்ற பிறகு, புத்தர் தனது சீடன் ஒருவனிடம், "எனக்குத் தாகமாக இருக்கிறது. சிறிது நீர் கொண்டுவா! என்றார்.



ஏரிக்குத் திரும்பிச் சென்ற சீடன், அதில் சிலர் துணிகள் துவைப்பதையும் ஒரு மாட்டுவண்டி இறங்கிச் செல்வதையும் கண்டான்.

வண்டி சென்றதாலும் துணிகள் துவைத்ததாலும் ஏரி நீர் கலங்கிப் போய் அழுக்கடைந்து காணப்பட்டது.

கலங்கிய நீரை எப்படிக் குருவுக்குக் கொடுக்கக் கொண்டு செல்வது என எண்ணித் திரும்பிச் சென்றான்.

புத்தரிடம் ஏரி நீர் கலங்கியிருப்பது பற்றிக் கூறினான்.

சிறிது நேரம் கழித்து, புத்தர் மீண்டும் சீடனைக் கூப்பிட்டு, “இப்போது போய் ஏரியிலிருந்து குடிக்க நீர் எடுத்துக் கொண்டு வா! என்றார்.

குழம்பியிருந்த ஏரி நீர் தெளிவதற்கு ஒரு மணி நேரம் ஆனது.

பின்னர் அழுக்கெல்லாம் கீழே படிந்து நீர் தெளிந்து காணப்பட்டது.

பாத்திரத்தில் அந்த நீரை எடுத்துக் கொண்டு புத்தரிடம் கொண்டு வந்து கொடுத்தான் சீடன்.

நீரையும் சீடனையும் பார்த்த புத்தர், “குழம்பியிருந்த நீரை நீயா தெளிவாக்கினாய்? அதை அப்படியே விட்டுவிட்டதால் தானாகவே அது தெளிந்துவிட்டது அல்லவா?

உன் மனமும் அப்படித்தான்... விட்டுவிடு! அது தானாகவே அடங்கி, தெளிவடைந்து விடும்.

இதுதான் இயற்கையின் இயல்பு. வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் உணர்ந்து கொள்ளப் பழகிவிட்டால் மனம் தெளிவு பெற்று வாழ்வே ஆனந்தமாகிவிடும் என்றார்.

சொல்லான தில் சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத்து ஆட்டிஆட்டித்
தொடையினைக் கிள்ளல்போல் சங்கற்பம் ஒன்றில்
தொடுக்கும் தொடுத்து அழிக்கும்.

பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றி ஆடும்.
புருஷனில் அடங்காத பூவைபோல் தானே
புறம்போந்து சஞ்சரிக்கும்

கல்லோடு இரும்புக்கும் மிகவன்மை காட்டிடும்

காணாது கேட்ட எல்லாம்
கண்டதாக காட்டியே அணுவாச் சுருக்கிடும்.
கபடநா டக ஜாலமோ?

எல்லாமும் வலது இந்த மனமாயை ஏழையாம்
என்னால் அடக்கவசமோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்றபொருளே. (தா.பா.92)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- அழைத்த மாத்திரத்தில் அருகில் வராத பிள்ளையைத் தாயானவள் தொட்டிலில் இட்டு ஆட்டுவதும்,
- ஆட்டி உறங்க முற்படும்போது, உறங்காதிருக்கத் தொடையில் கிள்ளுவதும் போல
- மனமமாகிய மாயையானது விருப்பத்தோடு கூடிய எண்ணம் ஒன்றை முதலில் உண்டாக்கும்.
- பிறகு அதுவே அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிடும்.
- கொடிய துன்பம் என்னும் ஏழு நிலையங்களில் சென்று, அலைந்து திரியும்.
- கல்லையும் இரும்பையும் விடத் தமக்கு வலிமை இருப்பதாய்க் காட்டிக் கொள்ளும்.
- நேரில் காணாது, காதால் கேட்டதை, கண்ணால் கண்டதாகக் கூறும்.
- உயிரை அதன் வியாபகம் தெரியாதபடி அணு அளவாகச் சுருங்கி நிற்கச் செய்யும்.
- வஞ்சனை பொருந்திய மாயவித்தையை நிகழ்த்தும்.
- இப்படி எல்லா வல்வமையையும் ஒருங்கே பெற்றது இந்த மனமாகிய மாயை.

அறிவிலியாகிய என்னால் இதனை அடக்க முடியுமோ? என்று வருந்திய தாயுமானவருக்கு வேதாத்திரியம் வழி சொல்கிறது.

மனதை அறிய வேண்டும் வேதாத்திரியம்

மனிதனின் அறிவாட்சித் தரம் என்பது அவனிடம் உள்ள மனதின் தன்மையையும், குணத்தையும் பொறுத்தது.

மனமே தன்னிடம் உள்ள அனுபவங்களைத் தீர்மானித்து, அதன் குணத்தைப் பெறுகிறது.

மனதை அறியவும், மனம் என்ற கருவி மூலம் தான் முடியும்.

வேறு எந்தக் கருவியின் மூலமும் அதை அளவிட முடியாது .மனதை அளவிட மனதை உள்நோக்கிச் செலுத்தி கவனித்தால் மனதில் தோன்றும் எண்ணங்களையும், அவை செயல்படும் விதத்தையும், அதன் மூலத்தையும் அறியலாம். மனதின் உள்நோக்கிய பயணமே அகத்தவமாகும்.

## மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம் – வேதாத்திரியம்

பிறப்பு சிறப்போடு விளைவு உணர்வு நான்கும்,
    பேரண்டத்தில் தொடர்ந்த நிகழ்ச்சி ஆகும்.
இறப்பு எனும் மறைவு எதற்கும் எவர்க்கும் இல்லை.
    எல்லாமே அணுக்கள் கூடல் பிரிதல் ஆகும்.
திறப்பு பெற்றால், மனிதமனம் அனைத்தும் அதனில்
    தெளிவாகும். அனைத்துலக உண்மை யாவும்.
மறப்பும் நினைப்பும் உறக்கம் விழிப்புப் போன்றே.
    மாறிமாறி மனம் அடையும் விந்தை! காண்பீர்.” (ஞாக.பா.1184)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 5. முக்திநிலை ஈதென்று உணர்த்தியே

மனம் படிப்படியாகமாறி, முன்னேறி அதன் தன்மையில் தெளிவு மிகும்போது ஆன்மாவை நன்றாகப் பிரதிபலிக்கிறது.

இப்படியே தெளிவு மிகுந்து மிகுந்து ஆன்மாவின் தன்மை முழுவதையும் பிரதிபலிக்கும் அளவிற்குத் தெளிவு பெற்று விடுதலை பெற்று விடுகிறது மனம்.

இந்த நிலையில் ஆன்மா விடுதலை பெறுகிறது. இதுதான் ஆன்மாவின் இயல்பு.

குறிக்கோள் என்ன? இந்தியாவில் உள்ள பல வகைச் சமயப் பிரி வினரும் ஆன்மாவுக்குக் கூறும் குறிக்கோள் ஒன்றாகவே இருக்கிறது. அதுவே முக்தி." (ஞானதீபம், சுவாமி விவகானந்தர், பாகம் 6., பக்.227-228)

கண்ணார நீர்மல்கி உள்ளம்நெக்கு உருகாத
  கள்ளனேன் ஆனாலுமோ
 கைகுவித்து ஆடியும் பாடியும் விடாமலே
  கண்பனித் தாரைகாட்டி,

அண்ணா பரஞ்சோதி அப்பா உனக்கு அடிமை
  யான் எனவும் மேல் எழுந்த
 அன்பு ஆகி நாடகம் நடித்ததோ குறைவு இல்லை
  அகிலமும் சிறிது அறியுமேல்

தண்ணாரும் நின்னது அருள் அறியாதது அல்லவே.
சற்றேனும் இனிது இரங்கிச்
சாசுவத முக்திநிலை ஈதென்று உணர்த்தியே
சகஜநிலை தந்து, வேறு ஒன்று

எண்ணாமல் உள்ளபடி சுகமாய் இருக்கவே
ஏழையேற்கு அருள்செய்கண்டாய்.
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்ற பொருளே. (தா.பா.93)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- கண் நிறைய நீரினைப் பெருக்கி, உள்ளம் நெகிழ்ந்து உருகாத கள்ளத்தனம் உடையவன் ஆனாலும்,
- கைகளைத் தலைக்கு மேல் கூப்பி, ஆடியும், பாடியும், விட்டு நீங்காமலும், கண்களில் நீரைத் தாரையாக ஒழுகவிட்டு,
- "அண்ணா!" என்றும், "மேலான சோதியே!" என்றும், "அப்பா!" என்றும் "உனக்கு அடிமை நான்!" என்றும்,
- மேலெழுந்த வாரியாக அன்பு செலுத்தி,
- நாடகம் நடித்ததில் குறைவில்லை. இதனை உலகமும் சிறிதளவு அறியும்.
- இது குளிர்ச்சி பொருந்திய திருவருளால் அறியப்படாதது அல்லவே!
- இனி ஒரு சிறிதளவேனும் இரக்கம் காட்டி "நிலையான முக்தி நிலை" இது என்று உணர்த்தி, இயல்பான நிலையைத் தந்து, வேற எதனையும் நினையாதபடி இன்பமுற்று இருக்க, இந்த அறிவிலிக்கு அருள் செய்வாயாக!

# அறிவில் தெளிவு பெற்றால் கலக்கமில்லை என்கிறது வேதாத்திரியம்.

அறிவில் தெளிவு பெறுவதே "முக்தி"

"வாழ்வில் "மனம்" தான் மிகவும் மதிப்புடைய ஒன்றாகும். மனமே உயிரின் படர்க்கை ஆற்றல்தான்.

உயிரோ மெய்ப் பொருளின் இயக்கச் சிறப்பாகும். மனம், உயிர், மெய்ப்பொருள் என்ற மூன்றும் மறை பொருள்களாகும்.

இவை நிலையால் வேறுபாடாக இருக்கின்றனவே தவிர, பொருளால் ஒன்றேயாகும்.

இந்த மறை பொருள்களின் இருப்பு, இயக்கம், விளைவுகள் இவற்றை உணர்வதற்கு பின்பற்றும் 'மனவளக்கலையினை' அகத்தவம் என்றும் 'யோகம்' என்றும் வழங்கப்படுகிறது.

மனதின் மூலம் நோக்கி ஆராயும் பயிற்சியினை 'யோகம்' என்றும், ஆராய்ந்த பின் கண்ட விளக்க வழியில் வாழ்வை நடத்தும் நெறியினை 'ஞானம்' என்றும் வழங்குகிறோம்.

.

விளைவறிந்த விழிப்போடு ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்று செயல் வழிகளையும் நன்கு பழகி அவற்றிலிருந்து வழுவாது தானும் சிறப்போடு வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் விளக்க வழி வாழ்வே 'ஞான நெறியாகும்'.

எள்ளுக்குள் எண்ணையைப் போன்று பிரபஞ்சம் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நின்று இயங்கும் ஆன்மா, ஜீவன், கடவுள், இயற்கை, சக்தி என்று பலவாறாகச் சொல்லப்படும் அரூப சக்தி நிலையை (▯▯▯ ▯▯▯▯▯▯ ▯▯ ▯▯▯ ▯▯▯ ▯▯▯▯▯▯) அறிவால் அறிந்து, வாழ்வில் அமைதி பெறுவதே, அறிவில் தெளிவு பெறுவதே "முக்தி" எனப்படும்".வாழ்க வளமுடன்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 6. நின்னோடு இருக்கும் நாள் எந்தநாள்

ஔவையார் இயற்றிய விநாயகர் அகவல்

சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி"

அந்த சிவமேதான் எழுச்சி பெற்று, பரிணமித்து நீங்களாகவும், நானாகவும், ஜீவன்களாகவும், சித்தாகவும் இருக்கிறது என்று சொல்லி இறுதியாக அஞ்சுகரத்தின் அரும் பொருள் தன்னை எனத் தொடங்கி, விரைகழல் சரணே என அகவல் முடிகிறது.

நான் உன்னோடு இரண்டறக் கலந்து நிற்கும் நாள், எந்த நாளோ? இந்நாளில் அது முற்றுப் பெறாதோ?" என ஏங்குகிறார் தாயுமானவர் இந்தப் பாடலில்.

காகம் ஆனதுகோடி கூடிநின் றாலும் ஒரு
 கல்லின்முன் எதிர் நிற்குமோ?
கர்மம் ஆனதுகோடி முன்னேசெய் தாலும்நின்
 கருணைப்ர வாக அருளைத்

தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ?
 தமியனேற்கு அருள் தாகமோ
சற்றும் இலை என்பதுவும் வெளியாச்சு. வினையெலாம்
 சங்கேத மாய்க்கூடியே

தேகம் ஆனதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
 சேராமல் யோகமார்க்க

சித்தியோ வரவில்லை. சஹஜ நிட்டைக்கும்என்
சிந்தைக்கும் வெகுதூரம். நான்

ஏகமாய் நின்னோடு இருக்கும் நாள் எந்தநாள்
இந்நாளில் முற்று உறாதோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்றபொருளே. (தா.பா.94)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- ஒரு கோடி காகம் ஓர் இடத்தில் கூடி இருந்தாலும், ஒரு கல் கொண்டு வீச, அங்கு ஒரு காகமேனும் எஞ்சி நிற்குமோ?
- அதுபோல முன்செய்த ஒரு கோடி வினைகள் திரண்டு நிள்றாலும், நினது அருள் வெள்ளத்தின் முன் எதிர்நிற்கும் எல்லமை உடையனவோ அவை?
- நினது திருவருளைப் பெற வேண்டும் என்னும் தாகம் கொண்டவர்க்கு, அவ்வினைகளால் வரும் துன்பமும் உண்டோ?
- எந்த ஆதரவுமின்றித் தணிந்து நிற்கும் எனக்கு நின் அருளைப் பெற வேண்டும் என்னும் தாகம் ஒரு சிறிதும் இல்லை. இது வெளிப்படை.
- முன் செய்த வினைகள் அனைத்தும் ஒரு கட்டுப்பாட்டுடன் ஒன்றுகூடி என் உடம்பை மிகவும் வாட்டி வதைக்கிறதே!
- மேலும் மேலும் துன்பங்கள் வந்து அணுகாது இருக்க உதவும் யோக நெறியும் கைகூட வில்லையே!
- ஞானியர்கள் கூடும் இயல்பான நிட்டைக்கும் எனக்கும் உள்ள இடைவெளி மிகவும் பெரியது.
- நான் உன்னோடு இரண்டறக் கலந்து நிற்கும் நாள், எந்த நாளோ? இந்நாளில் அது முற்றுப் பெறாதோ?

## நான் என்பது பிரம்மம் என்கிறது வேதாத்திரியம்

நீங்களும் நானும் ஒரு மரமும் ஒரு செடியும், ஒரு சிங்கமும் ஒரே மூலத்தின் வெளிப்பாடுகள் தான். வெளியின் வெளிப்பாடே பிரபஞ்சம்.

- அனைத்துக்கும் மூலமாக இருப்பது ஒன்றே ஒன்றுதான், எது? இந்த சுத்தவெளிதான்.
- இந்தப் சுத்தவெளி தன் பணத்தை ஆரம்பித்து முதலாவதாக விண்ணாக மாறியது.
- பிறகு காற்றாக வந்தது. பிறகு பயணத்தைத் தொடர்ந்து தொடர்ந்து நெருப்பாக வந்தது. பிறகு நீராக வந்தது, நிலமாக வந்தது.
- பிறகு பஞ்ச பூதங்களை கூட்டிக் கூட்டி உயிரனிங்களாக வந்தது. அந்த உயிரினங்களிலும் முதலில் புழுவாக வந்தது.
- புழுவாய், பூடாய், பல் விருகமாகி வளர்ந்து வளர்ந்து விலங்கினமாக வந்தது.
- விலங்கினமாக வந்ததற்குப் பிறகு மனிதராய் வந்தது. ஆக, ஒன்றே ஒன்றாக இருந்த அந்த தெய்வம், ஆதியாக இருந்த சுத்தவெளியாகிய சிவம் அனைத்துமாகி அனைத்து மனிதர்களாக வந்துவிட்டது.
- மனிதர்களாக உருவாகி உருவாகி ஒரு காலகட்டத்தில் எனது தாத்தாவாக வந்தது. எனது பாட்டியாக வந்தது.
- ஆதியாகிய சுத்தவெளியாகிய தெய்வமேதான் ஒவ்வொன்றாக மாறி மாறி எனது தாத்தாவாக பாட்டியாக வந்தது.
- மேலும் அது தன் பயணத்தைத் தொடர்ந்த தொடர்ந்து எனது அப்பாவாகவும் அம்மாவாகவும் வந்திருப்பது அதே சுத்தவெளி தான்.
- அது தன் பணத்தை இன்னும் தொடர்ந்து. அப்பா, அம்மா மூலமாக நாானக வந்திருக்கிறது.
- ஆக நான் யார்? சுத்தவெளியாகிய மெய்ப்பொருளே நான்.
- சரி இப்போது நீங்கள் நினைத்துப் பாருங்கள். உங்கள் பயணம் எங்கே ஆரம்பித்தது?

- நீங்களும் அந்த சுத்தவெளியாகிய மெய்ப்பொருளே.
- சுத்தவெளி தன் பணத்தை தொடங்கி ஒவ்வொரு இரயில்வே நிலையத்திலும் ஆக,
- முதலில் பஞ்சபூத ஸ்டேஷனில் தொடங்கி, அப்புறம் பஞ்ச பூதங்கள் ஒன்றாக சேர்ந்து உயிரினங்களாகி புழுவாக ஒரு ஸ்டேஷன்,
- பூச்சியாக ஒரு ஸ்டேஷன்,
- பறவையாக ஒரு ஸ்டேஷன்,
- பாம்பாக ஒரு ஸ்டேஷன்,
- விலங்கினமாக ஒரு ஸ்டேஷசன் வந்து வந்து பெருகிப் பெருகி அப்பா அம்மா மூலமாக நானாக வந்திருக்கிறது.
- இப்போது நீங்க யாருன்னு கேட்டா என்ன சொல்லணும்?
- அந்த சுத்தவெளியே நானாக ஆகியிருப்பதால், அந்த சுத்தவெளியே நான். அதை சிவம் என்றால் நானும் சிவமயம்தான். அதை பிரம்மம் என்றால் நானும் பிரம்மத்தின் துளிதான்.
- ஆகவே தத்துவம் சொல்லியது "அஹம் பிர்மாஸ்மி". ஆனால் அறியாமையால் புரியாமையால் நாம் என்ன சொல்கிறோம் என்பதை சிந்திப்போம்.
- நீங்கள் மதுரை ஸ்டேஷனில் நிக்கிறீங்க.
- ஒரு நண்பர் சென்னையிலிருந்துவருகிறார். அவரை வரவேற்க நீங்க மதுரை ரயில்வே ஸ்டேஷனில் நிக்கிறீங்க. அவரது ரயில் வந்துகிட்டு இருக்கு.
- உங்க பக்த்திலே நிற்கிற ஒருவர் கேட்கிறார், "சார் இந்த ரயில் எங்கிருந்து வருகிறது?" என்று, நீங்கள் சொல்கிறீர்கள் தாம்பரம் ஸ்டேஷனில் இருந்து வருகிறது என்று. அது உண்மையா? பொய்யா? அது முழுமையான உண்மையும் இல்லை. முற்றிலுமான பொய்யும் இல்லை.
- என்ன சொல்லி இருக்க வேண்டும்? சென்னையில் இருந்து புறப்பட்ட தாம்பரம் வழியாக வந்திருக்கு, இல்லையா?

- அதேமாதிரியதான் உங்களை நான், நீங்கள் யார்? அப்படின்னு கேட்டா, நீங்க என்ன சொல்றீங்க? ராமகிருஷ்ணருடைய பிள்ளைன்னு சொல்றீங்க. என்ன சொல்லியிருக்க வேண்டும். நான் சுத்தவெளியில் இருந்து புறப்பட்டு, ராமகிருஷ்ணரின் மூலமாக நானாக வந்திருக்கிறேன், அது தானே உண்மை.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7. பரிபாக காலம் பிறக்க இலையோ?

மலபரிபாகம் என்பது யாது?

ஆணவமலத்தின் ஆற்றல், ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை மறைக்க இயலாமல், நிற்கும் நிலையே, “மலபரிபாகம்" எனப்படும்.

(மலம் – ஆணவமலம், பரி – உபசர்க்கம்; பாகம் – திரிவு; பக்குவம்) அஃதாவது ஆணவமலத்தின் காரியங்கள் ஆகிய மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம், என்னும் கெட்ட குணங்கள் ஆன்ம அறிவை விட்டு நீங்குதல். மலபரிபாகத்தின் பயன் இருவினை ஒப்பு.

மலபரிபாகம் காலம் எது தெரியுமா? இறைநிலையை உணர்ந்து கொண்ட காலம்தான் மலபரிபாகம்.

தாயுமானவர், தனக்கு இன்னும் மலபரிபாகம் காலம் வரவில்லையோ? என வருந்துகிறார் இப்பாடலில்.

ஒருமை மனது ஆகியே அல்லல் அற நின் அருளில்

ஒருவன்நான் வந்திருக்கின்
உலகம் பொறாததோ? மாயாவிசித்ரம் என
ஒயுமோ? இடம் இல்லையோ?

அருளுடைய நின அன்பர் சங்கைசெய் திடுவரோ?
அலதுகிர்த் திய கர்த்தராய்
அகிலம் படைத்து எம்மை ஆள்கின்ற பேர்சிலர்
அடாது என்பரோ? அகன்ற

பெருமைபெறு பூரணம் குறையுமோ பூதங்கள்
பேய்க்கோல மாய் விதண்டை
பேசுமோ? அலதுதான் பரிபாக காலம்
பிறக்க இலையோ? தொல்லையாம்

இருமைசெறி ஜடவினை எதிர்த்துவாய் பேசுமோ?
ஏது உளவு சிறிது புகலாய்.
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்றபொருளே. (தா.பா.95)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- (உன்னிடம் வைத்த மனத்தைப் பின்வாங்காது) ஒருப்பட்ட மனத்துடன் நினது திருவருளால் நான் ஒருவன், உன்னுடன் கூடி இருந்தால் உயர்ந்தோர் பொறுத்துக் கொள்ள மாட்டாரோ?
- (இது மாயையின் இயல்புக்கு மாறான) மாயா வினோதம் என்று மாயை ஓய வழி செய்து விடுமோ?
- மாயையின் விளையாட்டில் இதற்கு வாய்ப்பே இல்லையோ?

- நினது திருவருளில் திளைத்திருக்கும் பழைய அடியார்கள் தடை செய்வார்களோ?
- அல்லது படைத்தல் முதல் ஐந்தொழில் இயற்றும் பிரம்மா முதலிய கடவுள்களில் சிலர் இதனைத் தகாத செயல் என்று கூறிவிடுவரோ?
- யாண்டும் நீக்கமற நிறைந்து விளங்கும் நுமது பெருமை பொருந்திய பூரணத் தன்மைக்கு குறை வருமோ?
- நும்மிடத்தில் பணிசெய்து கெண்டிருக்கும் (சிவ) பூத ங்க ளள பேய் போல் மாறுபட்டு நின்று, வீண் வார் த்தை பேசுமோ?
- அல்லது அடியேனுக்கு இன்னும் மலபரிபாகம் வந்து எய்தவில்லையோ?
- துன்பம் தருவதும், அடர்ந்து நிற்பதும், அறிவற்றதுமாகிய இருமை வினை எதிர்த்துப் பேசுமோ?
- இவற்றில் எது உண்மை என்று சிறிதளவேனும் கூறுவாயாக!

மலபரிபாகம் காலம் எப்போது வரும்? இறை நிலையை உணர்ந்து கொண்ட காலம்தான் மலபரிபாகம்.

வேதாத்திரியம் – இறைநிலையை உணர்ந்து கொண்டது பற்றி விரிவாகவும் விளக்கமாகும் சொல்கிறது.

இறையுணர்வு பெறும் ஆற்றல் எல்லாருக்கும் உண்டு :தேவை அகத்தமும் அறவாழ்வும்.

"அறிவு ஒரு மறை பொருள். அதைக் கொண்டு தான் பேரியக்க மண்டலப் பொதுவான மறைபொருள் தெய்வ நிலையை உணர முடியும். எந்த இயக்கமானாலும் இருப்பு நிலையில்தான் மோதவேண்டும்.

அதில்தான் முடியவும் வேண்டும். இங்கே உணர்ந்து கொள்வது எது? அலையாக இயங்கி மோதுவதா?

அல்லது இருப்பாக இருந்து தாங்குவதா? இருப்புதான் உணர்கிறது. எல்லாத் தோற்றங்களிலுள்ள இயக்க அலையை எங்கும்

நிறைவாயுள்ள நிலைபொருள் இருப்பு நிலை – இறைவெளிதான் உணர்வாகப் பெறுகிறது.

ஆகவே இறைவெளியான இருப்பு நிலை பேரறிவு – (▯▯▯▯▯ ▯▯▯▯▯▯▯▯▯▯▯▯▯▯) எனவும் அகண்டாகாரமாக அது நிறைந்திருப்பதால் (▯▯▯▯▯▯ – ▯▯▯▯▯▯▯▯▯▯▯▯▯▯) வாணறிவு எனவும் போற்றப்படுகிறது.

அறிவுதான் நான் என்னும் பொருளாக உள்ளது என்றும் அதுதான் இருப்பு நிலையாக தெய்வமாகவும் உள்ளது என்றும் உணரும் பெரும் பேறு மனிதனுக்குக் கிட்டிவிட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமை யுடையவனாகிறான்.

ஆதி முதல் அணுவரையில் அவனேயாகி அனைத்திலும் அவனே நிறைந்த பொருளாக இருப்பதால் அறிவே தான் நான் என்று உணர்ந்து அதுவே தெய்வமாகவும் இருக்கிறது என்ற பேரறிவில் அவன் எல்லாம் உணரும் ஆற்றல் பெற்றவனாகிறான். இதனை அறிவறிந்த பெரியார் 'வள்ளுவப்' பெருந்தகை

"ஐயப்படாது அகத்தது உணர்வானைத்

தெய்வத்தோ டொப்பக் கொளல்".

என்ற கவி மூலம் விளக்கியிருக்கிறார்.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர்களுக்கு எதைப் பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கம் இறைவனே பேசுவது போல இருக்கும்.

இந்த மனநிலையில்தான் முழுமையான அமைதி மனிதனுக்குக் கிட்டும். அறிவை அறியும் வரை அது குறையுடையதாகவே இருக்கும்.

அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலனின்பம் என்ற நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற குறையுடையதாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும்.

அறிவையறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு. அதற்கு பயிற்சி வழி அகத்தவமும் (▯▯▯▯▯▯▯▯▯▯ ▯▯▯▯▯▯▯▯▯ ▯▯▯▯), அறநெறி பற்றி வாழும் முறையும் ஆகும்.

அகத்தவமும் அற வாழ்வும்".

"மறைபொருளாம் அறிவு சிவம் இரண்டும் ஒன்றாய் நானாய்
மனிதன் தெய்வமாய்த் திகழும் மாபதம் பேறானால்
இறையுணர்வால் தன்முனைப்புப் பேரறிவாய் மாறும்
எப்போதும் ஈசன் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்;
குறையறிவில் பொருட்கள் புகழ் புலன் இன்பம் இவற்றில்
கொடிய வறுமை பெருகும். நிறைவு கிட்டா வாழ்வில்
நிறைநிலையை எவரெனினும் முயற்சித்தால் பெறலாம்
நேர்வழியோ அகத்தவமும் நிறையற வாழ்வாகும்". (ஞாக.பா.1671)

இருக்கிறது என்று சொன்னால் எடுத்துக் காட்ட முடியாது. எடுத்துக் காட்ட முடியாதததால் இல்லை என்று மறுத்துக் சொல்லவும் முடியாதது மறைபொருள் எனப்படும்.

அறிவும்,தெய்வமும் மறைபொருட்கள் ஆகும். அறிவுதான் நான் என்னும் பொருளாக உள்ளது என்றும் அதுவேதான் இருப்பு நிலையான தெய்வமாகவும் உள்ளது என்று உணரும்பேறு மனிதனுக்கு கிட்டிவிட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமை யுடையவனாகிறான் .அதுவே இறையுணர்வு நிலையாகும்.

இறையுணர்வினால் மனிதனில் எழும் தன்முனைப்பானது பேரறிவாகவே மாறும். எப்போதும் இறைநிலையின் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர்களுக்கு எதைப்பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கமானது இறைவனே பேசுவது போல இருக்கும்.

அறிவை அறியும்வரை அது குறைபாடுடையதாகவே இருக்கும். அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் என்ற

நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும். மேலும் வேண்டும் என்ற குறையுடையதாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும்.

அறிவை அறிந்த முழுமை பெறுவதற்கான ஆற்றல் அனைவரிடமும் உள்ளது. முயற்சி செய்பவர்கள் அந்நிலையை எய்தலாம். அத்தகு, பயிற்சி வழி அகத்தவமும், அறநெறி சார்ந்து வாழும் முறையும் உதவியாகும்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 8. மாதவர்க்கு ஏவல்செய்து சித்திபெறலாமா?

தொண்டு என்பது மற்றவர்கள் துன்பம் அல்லது உதவி தேவைப்படும் போது அத் துன்பத்தினைப் போக்க இயன்ற உதவிகளைத் தருவது.

அந்தப் பண்பே சேவை என்பதாகும். மறுபயன் கருதாது பிறர்க்கு உதவி செய்யும் பண்பு நல்ல சமுதாயத்தை உருவாக்கும்.

.

"தன்னலமற்ற சமூக சேவையே உயர்ந்த தெய்வீகப் பணியாகும். நாம் ஒவ்வொருவரும் நம்மை சுற்றியுள்ள சமூகத்தில் துன்பப்படும் உயிர்களுக்கு நம்மால் இயன்ற அளவு சிறிது நேரத்தையும், சக்தியையும், பொருளுதவியையும் அளிக்க வேண்டும்.

'**மக்கள் சேவையே மகேசன் சேவை**' என்கிற உயரிய விழிப்புணர்வு இந்த தேசத்திற்கு ஏற்பட வேண்டும்." என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பது விவேகானந்தரின் தாரக மந்திரங்களில் ஒன்று.

இதனை விளக்க சாஸ்ரங்களிலிருந்து ஒரு கதையை தனது சொற்பொழிவுகளில் அடிக்கடி சொல்வதுண்டு.

ஒரு பணக்காரனுக்குத் தோட்டமொன்று இருந்தது.  அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள்.

ஒருவன் சோம்பேறி, வேலையே செய்ய மாட்டான்.  ஆனால் ஏஜமான் தோட்டத்திற்கு வந்தால் போதும், உடனே எழுந்து போய் கூப்பிய கைகளுடன் அவரிடம், " என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது"என்று புகழ்பாடி அவர் முன்னால் பல்லை இளித்துக் கொண்டு நிற்பான்.

மற்றவன் அதிகம் பேசுவதே இல்ல.  ஆனால் கடினமான உழைப்பான்.  பலவகையான பழங்களையும் காய்கறிகளையும் சாகுபடி செய்து. நெடுந்தொலைவில் வசிக்கின்ற அந்த எஜமானின் வீட்டிற்கு சுமந்து கொண்டு செல்வான்.

இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் யாரை எஜமான அதிகம் விரும்புவார்?

சிவபொருமான்தான் அந்த எஜமான்.  இந்த உலகம் அவரது தோட்டம்.  இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள்.

ஒரு வகையினர் சோம்பேறிகள். .  எமாற்றுக்காரர்கள்.  அவர்கள் எதுவும் செய்வதில்லை.  சிவபெருமானின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குணநலன்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஏழைகளான, பலவீனர்களான எல்லா மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவருடைய படைப்பு அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்ப    தவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களுள் யார் சிவபெருமானின் அன்பிற்கு உரியவர்கள்? நிச்சயமாக அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே.

- தந்தைக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள். முதலில் பிள்ளகளுக்குச் சேவை செய்ய வேண்டும்.  சிவபெருமானுக்குச்

சேவை செய்  ய் விரும்புபவர்கள், அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும்.

- கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள்.

- கடவுளுக்கு தொண்டு செய்வதற்குச் சிறந்த ஒரு வழி இருக்கிறது.  "ஏழைகள், ஒதுக்கபட்டவர்கள், நோயாளிகள், பசித்தவர்கள், அநாதைகள் பொ    ன்  றவர்களுககுத் தொண்டு செய்வதுதான் அந்தச் சிறந்த வழி"

நில்லாது தேகம் எனும் நினைவு உண்டு,  தேகம்நிலை
நின்றிடவும் மௌனியாகி
நேரே உபாயம் ஒன்று அருளினை. ஐயோஇதனை
நின்று அனுஷ் ட்டிக்க என்றால்

கல்லாத மனமோ ஒடுங்கி உப ரதிபெறக்
காணஇலை ஆகையாலே
கைஏற்று உணும்புசிப்பு ஒவ்வாது எந் நாளும்உன்
காட்சியில் இருந்து கொண்டு

வல்லாள ராய்இமய நியமாதி மேற்கொண்ட
மாதவர்க்கு ஏவல்செய்து
மனதின் படிக்கெலாம் சித்திபெற லாம் ஞானம்
வாய்க்கும் ஒரு மனு எனக்கு. இங்கு

இல்லாமை ஒன்றினையும் இல்லாமை ஆக்கவே
இப்போது இரங்கு கண்டாய்.

இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே. (தா.பா.96)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- இந்த உடல் நிலைத்து நிற்காது என்ற ஒரு நினைவு எப்பொழுதும் உண்டு.
- இருப்பினும் மௌனகுருவாய் வந்து. இவ்வுடம்பை நிலை நிறுத்திக் கொள்ளவும் ஒரு வழி வகையினைக் கூறி அருளினாய்!
- அந்தோ! அவ்வழியில் நின்று அதனைக் கடைபிடித்து ஒழுகலாம் என்றால், ஞான நூல்களைக் கற்காத மனம் ஒருநிலைப்பட்டு, உலகப் பற்றுக்களைக் கைவிடும் நிலையைக் காண முடியவில்லை.
- ஆகையால் கையில் வாங்கி உண்ணும் பிச்சை உணவு, ஒருநாளும் ஒத்துக் கொள்வதில்லை.
- எனவே, நாள்தோறும் உன்னையே காணும் காட்சியைப் பெற்று. வல்லமை உடையவராய் இயமம், நியமம் முதலாகச் சொல்லப்பட்ட அட்டாங்க யோகம் பயில்வோர்க்குப் பணிவிடை செய்து. மனவிருப்பத்தின்படி சித்தி செய்ய ஒரு விண்ணப்பம் உண்டு.
- அது இல்லாமை என்ற ஒன்றை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே!
- இதற்கு இப்பொழுது நீ மனம் இரங்கி உதவுவாயாக!

"வாழ்வதனை முற்றுணர்ந்து அதை அமைதி வெற்றி வழிகண்டு வாழவைக்கும் பேரறமே தொண்டு" என்பார் **வேதாத்திரி** மகரிஷி.

**தொண்டுக்குத் தியாகமே உரைக்கல்**" என்கிறார் வேதாத்திரி. தொண்டினைச் செய்வதற்குப் பாராட்டையோ பணத் தனை யோ

எதிர்ப்பார்ப்பது சேவைக்கு இழுக்கானது என்பது வேதாத்திரியின் கருத்தாகும்.

இதனை தனது அனுபவத்தால் உரைக்கிறார் சுவாமி விவேகானந்தர்.

"உலகமாகிய இந்த நரகத்தில் ஒரே ஒரு நாளாவது, ஒரே ஒருவனின் இதயத்திற்காவது சிறிதளவு இன்பமும், மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால் அது மட்டுமே நிஜமான சேவையாகும். இந்த உண்மையை வாழ்நாளெல்லாம் பட்ட கஷ்டங்களுக்குப் பிறகு நான் உணர்ந்து கொண்டேன். மற்றவையெல்லாம் பொருளற்ற வெறும் பகல் கனவுகள் என்றுதான் சொல்ல வேண்டும். என்பார் சுவாமி விவேகானந்தர்.

இறைநிலை உணர்ந்த ஞான ஆசிரியர்கள்- பயிற்சியாளர்கள் தொண்டு என்ற அருட்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு சாதனையாக்க முற்படுதல் உலகில் அமைதி- நேர்மையினை நிலைபெறச் செய்யும் என்கிறார் வேதாத்திரி.

"நீதிநெறி உணர்மாந்தராகி வாழும்
நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம்காண்போம்"

வேதாத்திரியார் கூறுவதற்கு மேலே சென்ற விவேகானந்தர் நம்மை தூய்மைப்டுத்திக் கொள்ளவும் சேவை முக்கியம் என்கிறார்

- பிறருக்காகச் செய்கின்ற சேவையால், நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

தொண்டே களங்கங்கள் ம றை ஏற்ற வழியாகும் என்பதனை வேதாத்திரி தமது கவிதையில்-

"அகநோக்குப் பயிற்சியால் ஆராய்ந்தும் பரம்பொருளே
அறிவாயும் உளதென்று அறிந்திடலாம் எனினும் நாம்
இகவாழ்வில் பழக்கத்தால் ஏற்றுள்ள களங்கங்கள்
இனிதாய் மாறத் தொண்டே ஏற்ற வழி அதைச் செய்வோம்" (6)

உரிமை, கடமை, ஒழுக்கம் என்ற மூன்று வகையையும் அறிந்து. தன்னை உருவாக்கி, வாழவைத்து வரும் சமுதாயத்திற்கு எண்ணம், சொல், செயல் இவைகளைக் காலம், இடம் , சந்தர்ப்பம் இவைகளுக்கேற்றபடி பயன்படுத்தும் செயல்முறை தொண்டு என்று சிறப்பாக பேசப்படுகிறது.

தொண்டே தொழுகையாக வாழ்ந்த மகான்கள் பலரும் தொண்டின் பெருமையை விளக்கமாக மானுடத்திற்குத் தெரிவித்துள்ளார்கள்.

"அன்பர் பணி செயஎன்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என்று தாயுமானவரும்,


"தனி உடமை கொடுமைகள் தீரத் தொண்டு செ யயடா நீ தொண்டு செய்யடா" என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கூறுகிறபடி தொண்டின் மூலமாகத் தான் சமுதாயப் பரட்சியினை ஏற்படுத்த முடியும்.

எல்லா வளமும் ஓங்கிய உலகுக்கு உள்ள ஒரு குறைபாடு ஆன்மீக விளக்கம் இன்மை.

இதனை முழுமை செய்து மனித குலத்துக்குத் தொண்டாற்ற நீங்கள் ஒவ்வொருவரும் முனைந்து நில்லுங்கள்

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


**வேதாத்திரியத்தை ஏற்றால் வெற்றியே**
தாயுமானவர் - வேதாத்திரி - வள்ளலார்
மூவரும் ஒருவரே!
மன்னார்குடி பானுகுமார்


வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
கருணாகரக கடவுள்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
மௌனகுரு
வணக்கம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
சின்மயானந்தகுரு...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
எங்கும் நிறைகின்ற பொருள்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

## 9. எப்படிப் பிழைப்பது உரையாய்?

ஒரு சமயம் ஓர் இளைஞன் மிகவும் பதற்றத்துடன் இராமகிருஷ்ணரிடம் வந்து " சுவாமி! காமம் எப்படி விலகும்? சில சமயங்களில் கீழான ஆசைகளும் வெறுக்கத்ததக்க உணர்ச்சிகளும் என் மனதை அலைக் கழிக்கின்றன. அதனால் நான் அமைதியை இழந்து தவிக்கிறேன்" என்ற சொன்னார்.



அதற்கு இராமகிருஷ்ணர் அவனிடம், "கடவுளின் காட்சியைப் பெறாத வரையில் காமம் அடியோடு விலகுவதில்லை. அதன் பிறகும் உடல் இருக்கும் வரை அதன் சுவடு சிறிது இருக்கவே செய்யும். ஆனால் அதனால் எந்தத் தொந்தரவும் இருக்காது.

"என்னிடமிருந்து முழுமையாகக் காம வாசனை போய்விட்டதென்றா நினைக்கிறாய்? காமத்தை வென்றுவிட்டதாக நான் ஒரு சமயம் நினைத்தேன்.

அதன்பிறகு ஒரு நாள் பஞ்சவடியில் அமர்ந்திருந்த பொழுது என்னை மீறி காம உணர்ச்சி எழுந்தது.

என்னால் அதை அடக்க முடியாது போல் தோன்றியது. நான் ஆடிப் போய்விட்டேன்.

உடனே கீழே விழுந்து மண் தரையில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு அழுதபடியே அன்னை காளியிடம், "அம்மா, நான் பெரிய தவறு செய்துவிட்டேன். காமத்தை வென்று விட்டதாக இனி கருதமாட்டேன்." என்று சொல்லி முறையிட்டேன்.

நீயோ வாலிபத்தில் நிற்கிறாய்.  அதனால் உன்னால் அந்த வேகத்தை அடக்க முடியவில்லை.  பெரிய வெள்ளம் புரண்டு வரும்போது அது கரையைப் பற்றிக் கவலைப்படவா முடியும்!

கரையோ, எதுவோ வழியிலிருக்கும் எல்லாவற்றையும் அது உடைத்து கொண்டு முன்னேறுகிறது.  வயலில் புகுந்து பெரும் உயரத்திற்குத் தண்ணீர் தேங்குகிறது.

"ஆனால், கலியுகத்தில் மனதினால் செய்யும் பாவம், பாவமே இல்லையே என்று சொல்லப்பட்டிருக்கிறது.  ஏதோ ஒருமுறை உன் மனதில் கெட்ட எண்ணம் எழுந்ததற்காக ஏன் படபடக்கிறாய்?

உடலில் இயற்கைப்படி இந்த உணர்ச்சிகள் சில சமயம் வந்து போகத்தான் செய்யும்.  இதையும் மலம் கழிப்பது போன்ற சாதாரண உணர்ச்சியாகவே நினைத்துக் கொள்ள வேண்டும்.

மலம் கழிக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக யாராவது கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கவலைப்படுகிறார்களா?

"அதுபோலவே இதைப் போன்ற உணர்ச்சிகளையும் இயல்பானவையாக, அற்பமானவையாகக் கருதி, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காதே.

"மேலும் இறைவனிடம் மன்றாடி மனமுருகப் பிரார்த்தனை செய். உறரி நாமத்தை ஜபம் செய். பிரரது பெருமையில் ஈடுபடு.

கெட்ட எண்ணங்கள் வரட்டும்.  போகட்டும்.  அவற்றைக் கண்டு கொள்ளாதே.  இப்படிச் செய்தால் தாமாகவே அவை கட்டுக்குள் அடங்கிவிடும்.

இந்த வகையில் ஒர் இளைஞன் மற்றொர் இளைஞனுடன் பேசுவது போல் இராமகிருஷ்ணர் பேசினார்.

"வேறு எந்தவிதமான துன்பமுமின்றி, இரவுபகல் என எந்நேரமும் பெண்களோடு இன்பம் துய்த்து வாழ்ந்தேன். இவற்றில் இருந்து

தப்பிப் பழைப்பது எப்படி?" என தாயுமானவர் கேட்கிறார் இப்பாடலில்.

மரவுரி உடுத்தும் மலை வனநெல் கொறித்தும் உதிர்
வனசருகு வாயில்வந்தால்
வன்பசி தவிர்த்தும் அனல் வெயில் ஆதி மழையால்
வருந்தியும் மூலஅனலைச்

சிரம் அளவு எழுப்பியும் நீரினிடை மூழ்கியும்
தேகம் நமது அல்ல என்று
சிற்சுக அபேஷையாய் நின் அன்பர் யோகம்
செலுத்தினார். யாம் பாவியேம்

விரவும்அறு சுவையினோடு வேண்டுவ புசித்து, அரையில்
வேண்டுவ எலாம் உடுத்து
மேடை மாளிகை ஆதி வீட்டினிடை வைகியே.
வேறொரு வருத்தம் இன்றி

இரவுபகல் ஏழையர்கள் சையோகம் ஆயினோம்
எப்படிப் பிழைப்பது உரையாய்?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்றபொருளே. (தா.பா.97)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- மரப்பட்டையை ஆடையாக உடுத்து, மலைக்காடுகளில் விளையும் மலைநெல்லைக் கொறித்துத் தின்று,
- முதிர்ந்த காட்டு மரங்களின் காய்ந்த இலை, வலிய வாயில் வந்து விழின், அதனை உணவாக உண்டு.

- கொடிய பசியைப் போக்கி,
- வெயில் மழை முதலியவற்றால் வருத்தமுற்று,
- மூலாதாரத்தில் சூட்டினை உண்டுபண்ணி, குண்டலினி ஆற்றலை எழுப்பி, உச்சிவரை கொண்டு சென்று,
- புனித தீர்த்தங்களில் நீராடி, உடம்பு தம்முடையது அன்று என்று உணர்ந்து,
- ஞான ஆனந்தம் பெறும் விருப்பமுடன் நினது அன்பர்கள் யோகநெறியில் நின்றார்கள்.
- ஆனால் பாவியாகிய நான் அறுசுவையோடு கூடிய உணவை வேண்டும் அளவு உண்டு,
- இடுப்பில் விருப்பமான ஆடையை உடுத்தி,
- மாடமாளிகை முதலிய வீடுகளில் தங்கி,
- வேறு எந்தவிதமான துன்பமுமின்றி, இரவுபகல் என எந்நேரமும் பெண்களோடு இன்பம் துய்த்து வாழ்ந்தேன்.
- இவற்றில் இருந்து தப்பிப் பழைப்பது எப்படி? எடுத்துரைப்பாயாக!

காமத்தை கட்டுப்படுத்தலாம் – வேதாத்திரியம்.

உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் என்ற ஐந்திலும் அளவு முறை வேண்டும் என்பது வேதாத்திரிய கோட்பாடு.

காமத்தின் விளைவாக வரும் எண்ணத்தில் அளவுமுறை வேண்டும் என்கிறார் மகரிஷி.

அம்மா, அப்பா இருவரது காமத்தால் எடுத்த இந்த உடம்பும், காமத்தால் உண்டானதுதானே என்று தேவிமகாத்மியம் கூறுகிறது.

காமத்தைக் கட்டுப்படுத்த சித்தர் யோகமாகிய ”காயகல்பப் பயிற்சியை” மகரிஷி மானுடத்திற்குத் தந்துள்ளார்.

காமத்திற்கு அடிப்படையான விந்துவை பால் சுரப்பியிலிருந்து மேல்நோக்கி எழுப்பி விடுவதால், காமத்தை கட்டுப்படுத்தலாம்.

காமத்தை ஆக்க சக்தியாக மாற்றலாம். இது போன்ற இரகசியங்களைச் சொல்லித் தருகிறது மகரிஷியின் காயகற்பப் பயிற்சி.

"வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் எந்தன் வினை மறந்தேன் இறைவா
உனை மறந்தேன் ஆனால் நீ உள்ளுணர் எனை மீட்டு"(ஞாக.பா. 1646-5)

முயற்சியும் பயிற்சியும் செய்து காமத்தை கட்டுக்குள் வைக்கலாம்.

வாருங்கள் மனவளக்கலை மன்றத்திற்கு. காயகல்பம் பயில்வோம். காம உணர்வுகளை ஆக்க உணர்வுகளாக மாற்றுவோம். வாழ்வில் வளமும் அமைதியும் பேரின்பமும் அடைவோம்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 10. பேரின்ப முத்திபெறுவது போராட்டமா?

அது ஒரு பெரிய குருகுலம். பல ஜென் துறவிகள் அங்கு தங்கியிருந்து கல்வி பயின்று வந்தனர்.

குருகுலத்தில் இருந்த தலைமை குருவுக்கு மிகவும் வயதாகிவிட்டது. அதனால் அவர் படுத்த படுக்கையாக இருந்தார். அவரிடம் தலைமை சீடன் ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் தனது கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, அமைதியாக அமர்ந்திருந்தார், தலைமை சீடன்.

அப்போது தலைமை குரு, அவரை அழைப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து அவர், குருவின் அறையை நோக்கிச் சென்றார்.

அறைக்குள் குளிரை தாங்க முடியாமல், போர்வையால் போர்த்திய நிலையிலும் நடுங்கியபடி அமர்ந்திருந்தார் குரு. அவருக்கு எதிரில் விறகுகள் குவித்து, நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.


தனது சீடனைப் பார்த்ததும், ‘உட்கார் என்று சைகை காட்டினார், குரு. தொடர்ந்து அவரும், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தார்.

குருவானவர் பேச்சைத் தொடர்ந்தார். ‘என்னை வயோதிகம் வாட்டி எடுக்கிறது.

உடலில் தள்ளாமை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய சீடர்களிலேயே நீ தான் முதன்மையானவன்.

எனவே எனக்குப் பிறகு, இந்த குருகுலத்தை ஏற்று நடத்தும் பொறுப்பை நீதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார் தலைமை குரு.

அதை ஏற்றுக்கொள்வது போல், தலைமை சீடன் அமைதியாக தலையாட்டினார். இதையடுத்து குரு தன் அருகில் இருந்த புத்தகத்தை எடுத்து சீடனிடம் நீட்டினார்.



‘இதை வாங்கிக்கொள். இது ஒரு அரிய பொக்கிஷம். உனக்கு இந்த புத்தகம் நல்வழியைக் காட்டும் என்று கூறி அதை வழங்கினார்.

ஆனால் தலைமை சீடனோ, அதை வாங்க மறுத்தார். ‘எனக்கு இது வேண்டாம் குருவே’ .

தன் சீடன் இந்த புத்தகத்தின் வலிமை தெரியாமல் மறுக்கிறான் என்று நினைத்த குரு, மீண்டும் அவனிடம் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி வலியுறுத்தினார்.

அதற்கு தலைமை சீடன், ‘இல்லை குருவே.. எனக்கு தேவையானதை யெல்லாம் தாங்கள் எப்போதோ கற்பித்து விட்டீர்கள். இது எதற்கு?’ என்று கூறி மீண்டும் மறுத்தார்.

ஆனால் குரு, ‘அப்படிச் சொல்லாதே. இது வேத நூல். பல தலைமுறைகளாக இந்த புத்தகம், நம்முடைய மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது’ என்றார்.

தலைமை சீடன் அப்போதும் குரு கொடுத்த புத்தகத்தை ஏற்கவில்லை.

உடனே குரு, தன்னுடைய சீடனைப் பார்த்து கேட்டார். ‘பசி வந்தால் உணவுக்கு என்ன செய்வாய்?’ .

‘பாத்திரத்தை எடுத்துக் கொண்டு யாசகம் பெற புறப்படுவேன்’ என்றார் தலைமை சீடன்.

‘சரி.. ஒருவர் பிட்சையிடும்போது என்ன வேண்டும் என்று கேட்பாய்?’ என்று அடுத்த கேள்வியை முன் வைத்தார் குரு.

தலைமை சீடனோ, ‘எதுவும் கேட்கமாட்டேன். அவர்கள் இடுவதை பெற்றுக்கொள்வேன்’ என்றார்.

‘அப்படி உன் பாத்திரத்தில் இடப்பட்ட பிட்சையாக இதை வைத்துக் கொள்’ என்று கூறி புத்தகத்தை நீட்டினார், அந்த மடத்தின் குரு.

மௌனமாக அந்த புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட தலைமை சீடன், அடுத்த நொடியே தன் கையில் இருந்த புத்தகத்தை அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தூக்கிப் போட்டார்.

பதறிப்போனார் குரு. ‘அடப்பாவி.. என்ன காரியம் செய்து விட்டாய்?’ என்று அலறினார்.

இப்போதும் அமைதியாக பதிலளித்தார் தலைமை சீடன். ‘பிட்சை

அளித்த யாருமே, தாங்கள் போட்ட பிச்சை என்ன ஆனது என்று பார்ப்பதில்லை குருவே.

அதுவும் இல்லாமல் ஞானம் என்பதே நெருப்புதானே. நெருப்பு நெருப்புடன் சேர்ந்துவிட்டது. வேதம் என்பது வெறும் எழுத்துக்கள். இவற்றிலா இருக்கிறது ஞானம்? என்றார் தலைமை சீடன்.

தன்னுடைய சீடன் தன்னை விடவும், பெரும் ஞானம் அடைந்தவன் என்பதை அந்த வார்த்தைகளில் இருந்து உணர்ந்து கொண்டார் குரு.

இத்தகைய ஞானம் முதிர்ந்தால் வீடுபேறு கைகூடும் என்பதை தாயுமானவர் இப்பாடலில் சொல்லுகிறார்.

முத்தனைய மூரலும் பவளவாய் இன்சொலும்
முகத்து இலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன் னதம் ஏற்ற இருகும்பம்
முலையின் மணி மாலைநால

வைத்து எமை மயக்கி இரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியில் ஆழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ

புத்தமிர்த போகம் புசித்துவிழி இமையாத
பொன் நாட்டும் வந்தது என்றால்
போராட்டம் அல்லவோ பேரின்ப முத்திஇப்
பூமியில் இருந்துகாண

எத்தனை விகாரம்வரும் என்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியாததோ.

இகபரம் இரண்டினிலும் உயிரினுக்குஉஉயிராகி
எங்கும் நிறை கின்றபொருளே. (தா.பா.98)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- முத்துப் போன்ற வெண்மை நிறப் பல்வரிசையும், பவளம் போல் சிவந்த உதடுகளுடன் கூடிய வாயில் இருந்து வெளிப்படும் இன்சொற்களும்,
- முகத்தில் விளங்கும்பூசிய மஞ்சள் பூச்சும்,
- பெருமூச்சு விடுமாறு காமவெறியைத் தூண்டும் கலசம் போன்ற இருமுலைகளின் மீது மாணிக்க மணிமாலை தொங்க,
- அதுகொண்டு எம்மை வசப்படுத்தி,
- இரண்டு கண்களாகிய வலையை வீசி.
- மாயையின் விளையாட்டாய் விளங்கும் பெருமயக்கமாகிய பெருங்கடலில் மூழ்கச் செய்யும், பாழாய்ப்போன சிறிய இடையோடு கூடிய மகளிர் தரும் சிற்றின்பமோ எனில்,
- அது புதிய அமிர்தத்தை உண்டு, போகம் துய்க்கும், கண் இமைக்காத தேவர்கள் வாழும் பொன்னுலகில் உண்டு என்றால்,
- இவ்வாழ்க்கை சண்டைக்களமாக மாறி விடும் அல்லவா?
- இம்மண்ணுலகயில் இருந்தபடியே பேரின்பமுத்தி அடைய வேண்டுமாயின் எத்தனை தடைகள் வரும்? என்பது அறிந்து சுகர் என்னும் முனிவர் துறவுநெறியை மேற்கொண்டாரே! அது இந்த உலகம் அறியாத நெறியா?

"போராட்டம் அல்லவோ பேரின்ப முத்திஇப் பூமியில் இருந்துகாண?" எனக் கேட்கிறார் தாயுமானவர். "ஞானமும் – முக்தியும்" ஒருமைத் தத்துவம் அறிந்தால் கிடைத்துவிடும் என்கிறது வேதாத்திரியம்.

"தவபலமும், தனையறிந்த நிலையும் கொண்டு
தனையடைந் தோர்க்கருள்புரியும் தகைமை யுள்ள
சிவநிலையோன் மெய்ஞ்ஞானி குருவாய் நின்று.

சீடனது புருவமையம் விரலால் தீண்ட,
அவனிலவன் லயமாகி ஆசான் தொட்ட,
அவ்விடத்தே ஞாபகத்தை ஒன்றி ஒன்றி,
உவமையிலாப் பேரின்பம் உள் உணர்ந்து,
ஒருமைத் தத்துவம் அறிந்தால், அதுவே முக்தி." (ஞாக.பா.1464)

அறிவை அறிவால் அறிந்த தெளிவே ஞானம் ஆகும். தன்னிலே எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தன்னையும் உணரக் கூடியதான பேரறிவில் சிற்றறிவு அடக்கம் பெற்ற நிலை முக்தி, மோட்சம், முழுமைப்பேறு ஆகும்.

தவத்தின் மூலம் அந்நிலை கைவரப்பெற்று, தன்னை அறிந்த நிலையும் கொண்டு, தன்னை அண்டியவர்க்கும், அந்நிலையை உணர்த்தக்கூடிய தகைமை உடையவரே சிவநிலை அடைந்த மெய்ஞானி ஆவார்.

அப்படிப்பட்ட மெய்ஞான அருட்குரு சீடனது புருவமையத்தை விரலால் தொட, சீடனானவன், தன்னில் தானே லயமாகி ஆசான் தொட்ட இரு புருவ மையத்தில் எந்நேரமும் நினைவை நிறுத்தி ஒன்றி ஒன்றி இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்துவந்தால், உவமை கூற முடியாத பேரின்ப நிலையை உள் உணர்வாகப் பெற்று ஒன்றே எல்லாமாகவும், எல்லா வற்றிலும் அந்த ஒன்றே இருக்கிறது என்ற ஒருமைத் தத்துவத்தை அறிந்து அனுபவமாகக் கொண்டால் அந்நிலையே முக்தி, மோட்சம், முழுமைப்பேறு ஆகும்.

ஞானம் என்பது அறிந்து கொள்வது. அறிந்து கொண்டதை அனு பவமாக்கிக் கொள்வது முக்தி ஆகும்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11.ஆனந்த நிறைவே

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனி உரிமையாகாது . அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி ஆனந்தத்தில் நிலைத்திருந்து ஆனந்தத்திலேயே ஒடுங்குகின்றன.

“ஆனந்தோ ப்ரஉற்மேதி வ்யஜானாத்!

ஆனந்தாத்த்யேவ கல்விமானி பதானி ஜாயந்தே!

ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி!

ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி!

தைத்தியோசநிஷதம் (3 – 6)

ஆனந்தம் பிரம்மம் என்று சாதகன் ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

பிறந்தவை எல்லாம் ஆனந்தத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்?

ஆனந்தமில்லாது யார் உயிர் வாழ்ந்திருக்க முடியும்?

ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

பேரின்பமாக விளங்கும் மேலான பொருளான சுத்தவெளியை

ஆனந்த நிறைவே என்று அழைக்கிறார் தாயுமானவர்.

உன் நிலையும் என் நிலையும் ஒருநிலை எனக்கிடந்து

உளறிடும் அவத்தை ஆகி
உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்டு
ஒளிக்கின்ற இருளென்னவே

தன்நிலைமை காட்டாது ஒருங்கஇரு வினையினால்
தாவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றும் இல்லா மாயை அதனால்
தடித்து அகில பேதம் ஆன

முன்னிலை ஒழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேல் உதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றும் ஆனந் தநிறைவே

என் நிலைமை யாய் நிற்க இயல்புகூர் அருள்வடிவம்
எந்நாளும் வாழிவாழி
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்ற பொருளே. (தா.பா.99)

- இம்மையிலும் மறுமையிலும் உயிருக்கு, உயிராகி, எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளே!
- பேரறிவு உடைய உன்னுடைய நிலையும், சிற்றறிவு உடைய என்னுடைய நிலையும், ஒரே நிலை உடையதுதான் எனப் பிதற்றித் திரியும் ஒரு துன்பத்துக்கு ஆளாகி.
- தன் உருவம் இப்படிப்பட்டது என்று காட்டிக் கொள்ளாத ஆணவ மலமும், ஒளியைக் கண்டு ஒளிந்து கொள்ளும் இருளைப் போன்று தன் நிலையைக் காட்டாது ஒடுங்கி நிற்க.
- இருவினையாகிய அலைவீசும் இன்பதுன்பமாகிய கடல் தடுமாற்  றும் அடைய.

- முற்றிலும் சூனியமாய் முடியும் மாயையானது தடித்து, பல உலகங்களாகத் தோன்றித் தன்னை வேறுபடுத்திக் காட்டி,
- அதன்பின்னர் சுட்டிக் கூறமுடியாதபடி அழிவு எய்த.
- பிரிப்பில்லாத எங்கும் நிறை முழுவடிவாய்த் தோன்றும் திருவடி உணர்வு (மூதறிவு) மேலோங்க, முன்பின், கீழ் மேல்நடு ஆகிய பக்க வேறுபாடுகள் இன்றி, முழுவதும் பேரின்ப மயமாய் நிறைந்துள்ள நிறைவே!
- இந்நிலைமை என் நிலைமையாய் நிற்குமாறு, அருள்பாலித்த நினது திருவருளானது என்றும் வாழ்க, வாழ்க!

இறைநிலை ஆனந்த நிறைவு என்று தாயுமானவர் சொன்னதை பேரின்ப ஊற்று என்பார் வேதாத்திரி மகரிஷி.

அண்டங்களும் பேரண்டங்களும் உன்னுள் அடங்குமாறு, ஒப்பற்ற நிறைவாய், பேரின்பமயமாய் விளங்கும் மேலான பொருளே என்று இறைநிலையை தாயுமானவர் போற்றுகிறார். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியோ.....

"பேரண்டப் பெருவெளியை நினைக்குந் தோறும்
பெருகிவரும் இன்பத்தை யான் என் சொல்வேன்" (ஞா.க.1419)

என்று பல இடங்களில் "பரம்பொருள் ஆனந்த நிறைவானது" என்று போற்றுகிறார் மகரிஷி.

"இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா – எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா" (ஞா.க.பா.1648–1)

உடல், உயிர் மனம் மூன்றும் ஒன்றிணைகின்றபோது அறிவானது விரிவடைந்து, தன்னிலே எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தன்னையும் காணக்கூடிய உணர்வுநிலை பேரின்ப நிலை ஆகும்.

இறைநிலையானது அறிவாக தோற்றங்கள் அனைத்திலும் ஊடுருவி நிறைந்து. ஒன்றோடு ஒன்று இணைத்துக் கொண்டுள்ளது.

அந்த அறிவானது அன்பை ஊற்றுப்போல சுரந்து கொண்டும் பெருகிக் கொண்டும் உள்ளது. பரம் ஆனந்தமாக இன்ப ஊற்றாக உள்ளது என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## வேதாத்திரியப் பார்வையில்

## தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்

### YOUTUBE LINKS

1. அவனன்றி ஓர் அணுவும் அசையாது https://youtu.be/B1aq46Fv918
2. இறைவனின் கருணை விளையாட்டு https://youtu.be/GOoz7-cGXsw
3. ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய் https://youtu.be/BuKtVyg2RBA
4. மனமாயையை என்னால் அடக்கவசமோ? https://youtu.be/GPS0zzOGYnk
5. முக்திநிலை ஈதென்று உணர்த்தியே https://youtu.be/0cdLNMj3Crw
6. நின்னோடு இருக்கும் நாள் எந்தநாள் https://youtu.be/evOX0l8DI8s
7. பரிபாக காலம் பிறக்க இலையோ? https://youtu.be/j1KNzplI9QQ
8. மாதவர்க்கு ஏவல்செய்து சித்திபெறலாமா? https://youtu.be/530ZhMJPnGI

9. எப்படிப் பிழைப்பது உரையாய்? https://youtu.be/B1zOVVGClkU
10. பேரின்ப முத்திபெறுவது போராட்டமா? https://youtu.be/TGO8Cib6FY4
11. ஆனந்த நிறைவே https://youtu.be/XT1vtsR3TFo

## துணைநின்ற நூல்கள்.


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
6. விநாயகர் அகவல், வேதாத்திரியப் பார்வை, அழகர் ராமானுஜம்
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை
9. மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு


# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )

6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)

10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்

20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து

21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்

13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar வென்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்

8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1

43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1

78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து

113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?